DEREK PRINCE
MINISTRIES - INDIA

இலவச இதழ்!



தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடை போடுதல்

– பகுதி 3

தேவனுடைய பிள்ளையாய் மாறுவது எப்படி ?

“தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடைபோடுதல்” என்ற தலைப்பிலான இந்த செய்தித்தொடரின் ஒவ்வொரு போதனையும், நம்முடைய அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமாய் தேவைப்படுகிற மிகவும் அடிப்படையான விஷயங்களாய் இருக்கின்றன. நம்முடைய வாழ்க்கையில் வழக்கமாய் எழும்புகிற ஒரு தேவையை அல்லது பிரச்சனையை தனியே பிரித்தெடுத்து, அதற்கு வேதாகமம் கொடுக்கின்ற தீர்வைக் கண்டுபிடித்து, அதைப் பயன்படுத்துவதுதான் நம் இலக்காயிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு தீர்வைக் கொடுக்கிற குறிப்பிட்ட வாக்குத்தத்தத்தை தேவனுடைய வார்த்தையிலிருந்து கண்டுபிடித்து, அதை நமக்குரியதாய் உரிமைபாராட்டுவதன் மூலம், அப்படிப்பட்ட பிரச்சனைகளை நீங்கள் எவ்வாறு தீர்க்க முடியும், தேவைகளை எவ்வாறு சந்திக்க முடியும் என்பதை நடைமுறை வாழ்க்கையில் பின்பற்றத்தக்கதாக உங்களுக்கு எடுத்துக் காண்பிக்கும்படி நான் முயற்சித்திருக்கிறேன்.

நம்முடைய முந்தின போதனையில், பாவத்தின் பிரச்சனையைக் குறித்தும், தேவன் நம்மை மன்னிப்பார் என்ற நிச்சயத்தை நமக்குக் கொடுக்கக்கூடிய வேத வாக்குத்தத்தத்தைக் குறித்தும் நாம் பார்த்தோம். இந்தப் போதனையில், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அடிப்படையாய் தேவைப்படுகிற இன்னொரு சத்தியத்தை கற்றுக் கொள்ளப் போகிறோம். தேவனுடைய பிள்ளையாய் மாறுவது எப்படி என்பதைக் குறித்து நாம் பார்க்கப் போகிறோம்.

ஒரு ஆழமான உரையாடல்

இயேசுவுக்கும், இயேசுவின் நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேலில் போதகனும், பரிசேயனுமாகிய நிக்கொதேமுவுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலில் இருந்து நாம் ஆரம்பிப்போம். இந்த உரையாடல், யோவான் சுவிசேஷத்தின் 3-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. 1 முதல் 11 வசனங்களை வாசிப்போம்.

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து, “ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால், நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்,” என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக, “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்,” என்றார்.

அதற்கு நிக்கொதேமு, “ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படி பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாம் தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ,” என்றான். இயேசு பிரதியுத்தரமாக, “ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட வேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து

வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான்," என்றார்.

அதற்கு நிக்கொதேமு, "இவைகள் எப்படி ஆகும்," என்றான். இயேசு அவனை நோக்கி, "நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்கிறேன். நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்து சாட்சி கொடுக்கிறோம். நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லை," என்றார்.

இது மெய்யாகவே ஒரு முக்கியமான உரையாடல்! நிக்கொதேமு நேர்மையானவன், நல்லவன், நிறைய கற்றறிந்தவன், விவேகமானவன். இவ்வளவு இருந்தபோதும், இயேசு பேசின வார்த்தைகளை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதைப் பார்க்கும்போது, சுவாரசியமாக இருக்கின்றது. வாழ்க்கையின் மிக முக்கியமான ஒரு விஷயத்தைக் குறித்து இயேசு இங்கு பேசுகிறார். "மறுபடியும் பிறக்க வேண்டிய", "தேவனால் பிறக்க வேண்டிய"; "புதிதாய் பிறக்க வேண்டிய" (எல்லாமே சரியான மொழிபெயர்ப்புகள்தான்) அனுபவத்தைக் குறித்து இயேசு இங்கு விவரமாகப் பேசுகிறார். ஆனாலும் இந்த முக்கியமான சத்தியத்தை நிக்கொதேமுவினால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் போராடிக் கொண்டிருந்தான்.

இரண்டு சுபாவங்கள்

மிகவும் முக்கியமான ஒரு அனுபவத்தைக் குறித்து இயேசு நிக்கொதேமுவிடம் பேசிக் கொண்டிருந்தார். இது இல்லாமல், ஒருவராலும் தேவனுடைய ராஜ்யத்தைப் பார்க்கவோ அல்லது அதற்குள் நுழையவோ முடியாது. இயேசுவின் வார்த்தைகள், பெரிய அளவில் நிக்கொதேமுவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இயேசு என்ன அர்த்தத்தில் அதைச் சொன்னார் என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இயேசு அவனிடம் விவரித்துச் சொன்ன விஷயத்தின் சாராம்சம் இதுதான். இரண்டு வகையான சுபாவங்கள் இருக்கின்றன. ஒன்று, விழுந்துபோன மாம்ச சுபாவமாக இருக்கின்றது. இன்னொன்று, ஆவிக்குரிய சுபாவமாக இருக்கின்றது. "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். ஆவியானவரால் பிறப்பது ஆவியாயிருக்கும்," என்று அவர் சொன்னார்.

மறுபடியும் பிறப்பதென்றால், திரும்பவும் தன் தாயின் வயிற்றிற்குள் சென்று, ஒரு சிறிய குழந்தையாய் பிறக்க வேண்டும் என்று நிக்கொதேமு நினைத்துக் கொண்டான். இயற்கையான பிறப்பைக் குறித்து தான் பேசவில்லை என்பதை இயேசு அங்கே தெளிவுபடுத்தினார். அந்தப் பிறப்பு, மாம்ச சுபாவத்தைத்தான் உருவாக்குகிறது. அது நிக்கொதேமுவிடம் ஏற்கனவே இருந்தது. ஆனால் இயேசு அங்கே ஆவிக்குரிய சுபாவத்தை உருவாக்கக்கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட பிறப்பைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார். இந்த அனுபவத்தை இன்னும் நிக்கொதேமு பெற்றிருக்கவில்லை.

இதை இன்னும் விளக்கிக் காண்பிக்கும்படி, இயேசு ஆவிக்குரிய தளத்தை காற்றோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். நம் கண்களால் பார்க்கக்கூடிய இந்த உலகத்தில், காற்று என்பதை நாம் எல்லோருமே அறிந்திருக்கிறோம். இயேசு சொன்னார், "காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய். ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினாலும் பிறந்தவன் எவனோ அவனும் அப்படியே இருக்கிறான்.

ஆவியானவரின் சுவாசக் காற்று

ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பழைய ஏற்பாடு எழுதப்பட்ட எபிரெய மூல மொழியிலும், புதிய ஏற்பாடு எழுதப்பட்ட கிரேக்க மூல மொழியிலும், ஆவி - சுவாசம் - காற்று என்பதைக் குறிக்கும்படி ஒரே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எபிரெய மொழியில், 'ரூவா (ruach) என்ற வார்த்தையாகவும், கிரேக்க மொழியில், 'நியூமா (pneuma) என்ற வார்த்தையாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் கிரியையைச் சுட்டிக் காண்பிக்கும்படியே, காற்றை ஒரு எடுத்துக்காட்டாக இயேசு இங்கே பயன்படுத்துகிறார். இயேசு சொல்கிறார், "பரிசுத்த ஆவியானவர் காற்றைப்போல கிரியை செய்கின்றார். எங்கே வீச வேண்டும் என்று ஒருவரும் காற்றுக்குச் சொல்ல முடியாது. அது நம் வாழ்க்கையில் வீசுகின்றது. அது எங்கேயிருந்து வருகிறது என்பதும், அது எங்கே போகிறது என்பதும் நமக்குத் தெரியாது." பிறகு அவர் அதிலிருக்கும் தொடர்பை வெளிப்படுத்துகிறார்: "புதுப் பிறப்பில், பரிசுத்த ஆவியானவரின் கிரியையும் அதுபோலவே இருக்கிறது. ஆவியானவர் எங்கேயிருந்து வருகிறார், எங்கே செல்கிறார் என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால் அவர் என்ன செய்கிறார் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்."

ஆவியானவரின் கிரியை

காற்று வீசுகின்றது என்பதை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம்? காற்றை நம்மால் பார்க்க முடியாது. ஆனால் காற்று வீசுவதால் உண்டாகும் மாற்றங்களை நாம் பார்க்க முடியும். நாம் அப்படி என்ன மாற்றங்களைப் பார்க்கின்றோம்? வானத்தில் மேகங்கள் விரைந்தோடுவதைப் பார்க்கின்றோம். தெருவில் புழுதி மண் மேலே கிளம்புவதை பார்க்கின்றோம். மரத்தின் கிளைகள் காற்றில் அசைந்து வளைவதைப் பார்க்கின்றோம். ஒரு பெண்ணின் தலையிலிருந்த தொப்பி காற்றில் பறந்தோடுவதையும், அதன் பின்னால் அவர் ஓடுவதையும் நாம் பார்க்க முடியும்.

இதெல்லாம், காற்று அப்பகுதியில் வீசுகின்றது என்பதையே காண்பிக்கிறது. மறுபடியும் பிறந்த ஒரு நபரைக் குறித்தும் இது உண்மைதான். தேவனுடைய ஆவியானவர் அவருடைய வாழ்க்கைக்குள் வருகின்றார். இது எங்கேயிருந்து வருகின்றது, எங்கே செல்கின்றது என்பதெல்லாம் அந்த நபருக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒரு மாற்றம் அவருக்குள் நடந்து கொண்டிருக்கிறது என்பதை அந்த நபர் நிச்சயமாக அறிந்திருக்கிறார்.

பல வருடங்களுக்கு முன், லண்டனில் ஒரு போதகராக நான் இருந்தபோது, டென்மார்க்கிலிருந்து ஒரு வாலிபப் பெண் எங்களுடைய வீட்டிற்கு வந்தார். இந்தப் புதுப் பிறப்பின்

அனுபவத்தைக் குறித்து அதிகமாய் அறிந்து கொள்ளும்படி அவர் வந்திருந்தார். இந்தப் பெண் வழக்கமாக சபைக்குச் செல்பவர். மறுபடியும் பிறப்பதற்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து என் முதல் மனைவியும், நானும் அவருக்கு எடுத்துச் சொன்னோம். பிறகு ஒரு எளிய ஜெபம் செய்யும்படி நான் அவரை வழி நடத்தினேன். அப்பொழுது அவரிடம் தேவன் என்ன எதிர்பார்த்தாரோ, அதை அவர் செய்தார்.

இந்த வாலிபப் பெண் எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர் அல்ல. இவர் நல்ல மனவலிமை கொண்டவர். (பெரும்பாலும் டென்மார்க் தேசத்தைச் சேர்ந்தவர்கள், எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் அல்ல.) ஆனாலும் அவர் இந்த ஜெபத்தைச் செய்த பிறகு, இரு பெரிய கண்ணீர்த்துளிகள் அவருடைய கன்னங்களில் வழிந்தோடின. உடனே சுதாரித்துக் கொண்டவராய், அவர் தன் கைக்குட்டையினால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். உடனடியாக, இன்னும் இரண்டு பெரிய கண்ணீர்த் துளிகள் அவருடைய கன்னங்களில் வழிந்தோடின. அக்கணத்தில், "நான் ஏன் அழுகின்றேன் என்று எனக்குத் தெரியவில்லை," என்று அவர் சொன்னார். உடனே நான் அவருக்கு பதில் சொன்னேன்: "பாருங்கள், இப்பொழுதுதான் காற்று வீச ஆரம்பித்திருக்கிறது."

பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார் என்பதற்கான ஒரு ஆதாரத்தைத்தான் இந்தப் பெண் அனுபவமாகப் பெற்றுக் கொண்டார். மென்மையான, நிம்மதி மற்றும் சந்தோஷத்தின் உணர்வை அவர் பெற்றுக் கொண்டார். அவரால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. வார்த்தைகளில் விவரிக்க முடியாத ஒரு அனுபவமாக அது அவருக்கு இருந்தது. அதினால் அவர் சங்கடப்பட்டாலும், அதை அவர் மெய்யாகவே உணர்ந்தார். அவரால் அதை மறைக்க முடியவில்லை.

இது எவ்வாறு நிகழ்கின்றது?

யோவான் 3-ம் அதிகாரத்தில், இயேசு நிக்கொதேமுவுடன் பேசிய வார்த்தைகளை நாம் திரும்பவும் கவனிப்போம். இதே வார்த்தைகளை இயேசு இன்னும் பலரிடம் பேசியிருப்பார் என்றுதான் தெரிகின்றது. ஆனால் ஒரு விசேஷமான காரணத்திற்காகத்தான், நிக்கொதேமுவுடன் இயேசு பேசின இவ்வார்த்தைகள் இங்கு எழுதப்பட்டிருக்கின்றன. ஏன்? புதுப் பிறப்பைத் தவிர வேறு ஏதேனும் நிக்கொதேமுவுக்குத் தேவைப்பட்டிருந்தால், அவனால் அதைப் பெற்றிருக்க முடியும். அவன் ஒரு மத போதகன். அவன் நன்கு கற்றறிந்த ஒரு மனுஷன். சமுதாயத்தில் அவனுக்கு நல்ல அந்தஸ்து இருந்தது. தேவனுக்கென்று வேறுபிரிக்கப்பட்ட யூத இனத்தைச் சேர்ந்தவனாயிருந்தான். ஒன்றை இங்கு கவனியுங்கள். மதமோ, கற்ற கல்வியோ, சமுதாய அந்தஸ்தோ, இன அடையாளமோ எதுவுமே புதுப் பிறப்பிற்கு மாற்றாக இருக்க முடியாது.

இதுவரை நாம் இரண்டு விஷயங்களைக் குறித்துப் பார்த்திருக்கிறோம்: மறுபடியும் பிறக்க வேண்டியதன் அவசியம் மற்றும் ஒருவர் மறுபடியும் பிறக்கும்போது என்ன நடக்கின்றது என்பதைப் பார்த்தோம். இன்னும் ஒரு மிக முக்கியமான விஷயத்தைக் குறித்து நாம் பார்க்க வேண்டும்: ஒரு நபர் எவ்வாறு மறுபடியும் பிறக்க முடியும்? இதைக் கற்றுக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது.

யோவான் 1:11-13 வசனங்களில், இயேசுவைக் குறித்து இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது:

அவர் (இயேசு) தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

இயேசு ஒரு யூதராய் யூத ஜனங்களிடத்தில் வந்தார். ஆனாலும் ஒரு தேசமாய், அவர்கள் தங்களுடைய மெசியாவாக வந்தவரை நிராகரித்தார்கள். ஆனால் அடுத்த வசனங்களுக்காக நான் தேவனுக்கு நன்றி சொல்கிறேன்.

அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.

எடுத்து வைக்க வேண்டிய முக்கியமான அடி

தேவனால், தேவனுடைய ஆவியானவரால் மறுபடியும் புதிதாய் பிறக்கும்படி ஒரு நபர் என்ன செய்ய வேண்டும்? "அவரை (இயேசுவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ," என்று வேதாகமம் எளிமையாகச் சொல்கிறது. அதாவது, நீங்கள் இயேசுவை உங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும். அவரை உங்களுடைய ஆண்டவராக அறிக்கை செய்ய வேண்டும். நீங்கள் அதைச் செய்யும்போது, தேவனுடைய பிள்ளையாய் மாறுவதற்கான உரிமையையும், அதிகாரத்தையும் அவர் உங்களுக்குக் கொடுக்கிறார். அவருடைய நாமத்தை விசுவாசிப்பதன் மூலம் நீங்கள் இந்த அடியை எடுத்து வைக்கின்றீர்கள்.

உங்களுடைய சுய நீதியை உரிமை பாராட்டுவதாலோ,

நற்கிரியைகளைச் செய்வதாலோ நீங்கள் இந்த அடியை எடுத்து வைக்க முடியாது. மாறாக, அவருடைய நாமத்தை விசுவாசிப்பதன் மூலம் நீங்கள் இதை எளிமையாகச் செய்ய முடியும். இந்த விசுவாச அடியை எடுத்து வைப்பதன் மூலம், நீங்கள் தேவனால் மறுபடியும் பிறக்கின்றீர்கள்.

மறுபடியும் பிறக்கின்ற இந்த அனுபவத்தைக் குறித்துப் பேசும்போது, இந்தப் புதிய பிறப்போடு சம்பந்தப்பட்டதாக நாம் நினைக்கக்கூடிய மூன்று விஷயங்களை யோவான் வெளியேற்றுகிறார். புதுப் பிறப்பு, இரத்தத்தினால் உண்டாகவில்லை என்று அவர் சொல்கிறார். அதாவது, அது இயற்கையான பிறப்பு அல்ல என்று அவர் சொல்கிறார். உங்களுடைய தாயும் தகப்பனும் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும், அது உங்களை இவ்விதத்தில் நல்லவர்களாக்கி விடாது. நீங்கள் ஆவிக்குரிய விதத்தில் புதிதாய் பிறக்க வேண்டும். இயற்கையான பிறப்பின் மூலம் உண்டாக முடியாத ஒரு புதிய சுபாவம் உங்களுக்கு உண்டாக வேண்டும்.

இரண்டாவதாக, அது "மாம்ச விருப்பத்தினால் உண்டாகாது," என்றும் யோவான் சொல்கிறார். அதாவது, விழுந்துபோன மாம்சீகமான விருப்பத்தினாலோ அல்லது அவ்விதமான வேட்கையினாலோ இது உண்டாவதில்லை.

மூன்றாவதாக, இது "மனுஷனுடைய விருப்பத்தினாலும் உண்டாவதில்லை என்று அவர் சொல்கிறார். 'மனுஷன்' என்பதற்கான கிரேக்க வார்த்தையின் அர்த்தம், 'கணவன்' என்பதாகும். கணவன் மற்றும் மனைவிக்கு இடையே நடக்கின்ற பாலியல் உறவினால் இந்தப் புதிய பிறப்பு உண்டாகவில்லை என்பதை இது காண்பிக்கிறது. இது வேறொரு தளத்தில் நடக் கின்றது. இது சரீரப் பிரகாரமானது அல்ல. இது ஆவிக்குரிய பிறப்பாயிருக்கிறது. தேவனுடைய ஆவியானவரால் புதிதாய் பிறக்கின்ற பிறப்பாய் இது இருக்கிறது.

வாக்குத்தத்தத்தை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்

இதை முடிக்கின்ற நேரத்தில், நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்ற தேவையை நீங்கள் பார்க்கின்றீர்கள் என்றால், நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளும்படி ஒரு வாக்குத்தத்தத்தை நான் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். வெளிப்படுத்தின விசேஷம் 3:20-ல், இயேசு இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்.

இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்.

நீங்கள் மறுபடியும் பிறக்க விரும்பினால், இதோ, முக்கியமான வார்த்தை உங்களுக்காகக் கொடுக்கப்படுகிறது. இப்பொழுதே உங்களுடைய இருதயத்தின் கதவை இயேசு தட்டிக் கொண்டிருக்கிறார். அவர் மென்மையானவர், பலவந் தமாய் உள்ளே நுழைய மாட்டார்.

இயேசு உள்ளே வர வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் அவரை உள்ளே அழைக்க வேண்டும். அவ்வாறு நீங்கள் அவரை உள்ளே அழைப்பீர்கள் என்றால், அவர் நிச்சயம் உள்ளே வருவார். காரணம், அவர் மென்மையானவர், தம் வார்த்தைக்கு உண்மையுள்ளவர்.

இயேசு தொடர்ந்து சொல்கிறார்: "நான் உள்ளே வந்து, அவனோடு உணவு உண்பேன். அவன் என்னோடு உணவு உண்பான்." முதலில் நீங்கள் உங்களுடைய உணவை இயேசுவுக்குக் கொடுக்க வேண்டும். அப்பொழுது அவர் தம்முடைய உணவை உங்களோடு பகிர்ந்து கொள்வார்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நீங்கள் அவரை உள்ளே அழைக்க வேண்டும். நீங்கள் அவருக்கு இணங்க வேண்டும். பிறகு, விசுவாசத்தில், அவர் உள்ளே வந்திருக்கிறார் என்பதற்காக, நீங்கள் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவருடைய நாமத்தின் மீது விசுவாசம் வைப்பதால்தான் இவையெல்லாம் நடக்கின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இப்பொழுதே இந்த அடியை எடுத்து வைக்கும்படி, பரிசுத்த ஆவியானவரின் காற்று உங்களுடைய இருதயத்தில் வீசிக் கொண்டிருக்கலாம். மறுபடியும் பிறக்க வேண்டியதற்கான, இந்த அடியை எடுத்து வைப்பதற்கான அவசியத்தை இப்பொழுது நீங்கள் உணரலாம்.

இது உண்மையென்றால், வெளிப்படுத்தல் 3:20-ல் எழுதப் பட்ட வாக்குத்தத்தத்தை எடுத்துக் கொண்டு, பின் வரும் ஜெபத்தை இயேசுவிடம் சொல்வோம்:

கர்த்தராகிய இயேசுவே, தேவனுடைய ஆவியான வரால் மறுபடியும் புதிதாய் பிறக்க வேண்டியதன் அவசியத்தை நான் அறிந்து கொண்டேன். நிக்கொதேமுவைப்போல, இந்தக் கிரியையை நான் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் என் இருதயத்தைத் தொட்டு, அதை உயிர்ப்பிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இரத்தத்தினால், மாம்ச விருப்பத்தினால், மனுஷனுடைய விருப்பத்தினால் உண்டாகக்கூடிய எந்த ஒரு விஷயத்திற்கும் அப்பாற்பட்ட ஒரு காரியம் எனக்கு வேண்டும். நான் இயேசுவை ஏற்றுக் கொள்கிறேன், ஆவியான வரால், தேவனுடைய பிள்ளையாய் மறுபடியும் பிறக்க விரும்புகிறேன்.

இயேசுவே, என் இருதயத்தின் கதவை நீர் தட்டிக் கொண்டிருப்பதை நான் உணருகின்றேன். உம்முடைய சத்தத்தைக் கேட்டு, நான் கதவைத் திறக்கின்றேன். உள்ளே வாரும் என்று அழைக்கின்றேன். என் வாழ்க்கையை உம்மிடம் அர்ப்பணிக்கின்றேன். நீர் உள்ளே வந்ததற்காக, உமக்கு நன்றி சொல்கிறேன். என் வாழ்க்கைக்குள் நீர் வந்திருக்கிறீர். உம்முடைய ஆவியானவரால் என்னை மறுபடியும் பிறக்கச் செய்திருக்கிறீர். இயேசுவே, உமக்கு

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538202
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

DEREK PRINCE MINISTRIES - INDIA
www.derekprince.in